வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 23.09.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 266 பக்கங்கள் : 08




# மத்திய அரசு - மாகாண சபை இடையே தொடரும் ஒருங்கிணைப்பு குறைபாடு!

## மீன்பிடி அமைச்சர் சந்திரசேகர் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்ரெம்பர் 23

**மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் நிலவும் ஒருங்கிணைப்புக் குறைபாடுகளால் வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. அத்துடன், திட்டங்களின் வினைத்திறன் குறைவதாகவும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**



கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் கீழ் செயல்படும் கடற்றொழில் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, தேசிய மட்டத்தில் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில் ஒரு விசேட கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை கடற்றொழில் அமைச்சு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.கே. கோலித கமல் ஜினதாச, அனைத்து மாகாண சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண பிரதம செயலாளர்கள், அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள்

07

# மாகாண சபைகள் தேர்தலை 2026இல் நடத்த அரசு முயற்சி

## யாழில் கூறினார் பிரதி அமைச்சர் மகிந்த



யாழ்ப்பாணம், செப். 23

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மூன்று தேர்தல்களை நடத்தியுள்ளது. தற்போது நாட்டில் அபிவிருத்திகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு தடை வராமல் அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முயற்சி செய்வோம் என பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

07

# வடக்கு - கிழக்கில் இராணுவத்தினர் மீட்ட 6000 தங்க பொருட்கள் மத்திய வங்கியிடம்

கொழும்பு, செப். 23

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மனிதாபிமான நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் மீட்கப்பட்ட, 10 ஆயிரம் தங்கப் பொருட்களில் 6 ஆயிரம் பொருட்கள் இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் அசங்க எஸ். போதரகமவிடம் தெரிவித்தது.

முந்தைய விசாரணையின்போது, இராணுவத்தினரால் மீட்கப்பட்ட 10 ஆயிரம் தங்கப் பொருட்களை

07

# மகிந்த, நாமல், ஷிரந்தி ஆகியோருக்கு எதிராக இலஞ்சம் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு!

கொழும்பு, செப். 23

முறையற்ற சொத்து சேகரிப்பு மற்றும் அரச நிதி முறைகேடாக பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பு இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார நேற்று

07

# மின்சார சபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடரும்

கொழும்பு, செப். 23

"இலங்கை மின்சார சபையின் அனைத்து தொழிற் சங்கங்களும் புதன்கிழமை வரை நடந்து வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர முடிவு செய்துள்ளன. இது ஒரு நாள் வேலைநிறுத்தமா, அடையாள வேலைநிறுத்தமா அல்லது தொடர்ச்சியான வேலை நிறுத்தமா என்பதை புதன்கிழமை தெளிவாகக் கூறுவோம்." -இவ்வாறு இலங்கை

07

# கரைச்சி பிரதேச சபை முன்பாக நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

கிளிநொச்சி, செப். 23

அரசாங்கத்தின் அபிவிருத்தியை மக்களுக்கு கிடைக்கவிடாமல் கரைச்சி பிரதேச சபை - குறிப்பாக தவிசாளர் தடுப்பதாகத் தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று கரைச்சி பிரதேச சபை முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சுயலாப அரசியல் நோக்கில் கிளிநொச்சியின் அபிவிருத்தியை தடுக்காதே, அதிகாரத்தால்

07



# வலுசக்தி இறையாண்மையை அரசு எப்போதும் பாதுகாக்கும்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

இந்நாட்டின் வலுசக்தி இறையாண்மையை அரசாங்கம் எப்போதும் பாது காத்து வருவதாகவும், எந்தவொரு சூழ்நிலையிலும் மின்சாரத் துறையை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இல்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வலியுறுத்தினார்.

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தேசிய பாதுகாப்பு மற் றும் இறைமைக்காக வலு சக்தி இறையாண்மையை உறுதி செய்வது அரசாங்கத்தின் நிலைப்பாடு என் றும், மின்சாரத் துறையின் நிறுவனக் கட்டமைப்பில் உள்ள குழப்ப நிலையைத்

07

# வட்டுவாகலில் வீடு ஒன்றின்மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

முல்லைத்தீவு, செப். 23

வட்டுவாகல் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவரின் வீட்டின் மீதே விஷமிகளால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் மதிலால் ஏறி மின்சாரத்தைத் துண்டித்து வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டுக்குள் தூங்கிக்கொண்டிருந்த வீட்டின்

07

# தங்கள் சொத்து விவரங்களை மறைத்துள்ள ஆளும்தரப்பினர்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 23

ஆளுங் கட்சியைச் சேர்ந்த சிலர் சொத்துகள் தொடர்பிலான தகவல்களை மறைத்துள்ளதுடன் குறைந்த மதிப்பிலான தரவுகளை காட்டியுள்ளதாகவும் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 2023/9 இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத் தின் மூலம் ஆளுங்கட்சியினர் சிக்கல்க ளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த சொத்து தொடர்பான தகவல்கள் 2024

07

# 321 போதைப்பொருள் கொள்கலன்கள் எங்கே?

## உண்மையை மறைக்கிறது அரசு என்கிறார் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

கொழும்பு, செப். 23

நாட்டில் பல்வேறு பகுதிகளில் ஐஸ் போதைப்பொருள் உட்பட பல போதைப்பொருள்கள் கைப்பற்றப்படுகின்றன. 2 கொள்கலன்கள் மாத்திரமே கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. மிகுதி 321 கொள்கலன்கள் எங்கே? இந்த கொள்கலன்கள் விடுவிப்பில் அரசாங்கம் உண்மையை மறைக்கிறது என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடியை தடுப்பதற்குத் தீவிர ரோந்து நடவடிக்கை

## கடற்படையினரிடம் அமைச்சர் வலியுறுத்தல்

முல்லைத்தீவு, செப். 23

முல்லைத்தீவு கடற்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை தடுப்பதற்காக ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு கடற்படையினரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளருக்கும், கடற்படையினருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் பணிப்பின் பேரில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி. கோலித கமல் ஜினதாச மற்றும் முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் சுதாகரன் ஆகியோர், மீனவ பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இதன்போது மீனவர்களின் பிரச்னைகளை கேட்டறிந்ததுடன், அவர்களின் கோரிக்கைகளும் உள்வாங்கப்பட்டன.

இதனையடுத்து முல்லைத்தீவு கோட்டபாய கடற்படை தளத்துக்கு விஜயம் செய்து, சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்த கடற்படை ரோந்து நடவடிக்கையை அதிகரிக்குமாறும் வலியுறுத்தினர்.

பின்னர் புல்மோட்டை கடற்படைத் தளத்திற்கு சென்று அங்குள்ள கடற்கடை அதிகாரி மற்றும் கரையோரப் பாதுகாப்பு அதிகாரியுடன் கலந்துரையாடி உடன் அமுலுக்கு வரும் வகையில் முகத்துவார வாயில் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது. (அ)

# யாழில் விசேட தொழிற்சந்தை



யாழ்ப்பாணம், செப். 23

யாழ். மாவட்ட செயலகம் மற்றும் மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களம் இணைந்து நடத்திய விசேட தொழிற்சந்தை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 09.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழில் அமைச்சின் பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்கவும், சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே. ஜி. எச். எச். ஆர். கிரில்ல ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த தொழிற்சந்தையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகளும், 50 இற்கு மேற்பட்ட நிறுவனங்களும் பங்குபற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் சிவசேனை உண்ணாவிரதம்



யாழ்ப்பாணம், செப். 23

வடக்கு மாகாண கல்வி அமைச்சு, வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ். வலயக் கல்வி அலுவலகம் ஆகியன அமைந்துள்ள வளாகத்துக்கு முன்பாக சிவசேனை அமைப்பால் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி புனித திரேசா பாடசாலைக்கு புதிய அதிபர் உரிய தகுதி நிலைகளுடன் இல்லாமல் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதன்போது கிளிநொச்சியில் இருந்து வாகனத்தில் வருகை தந்த புனித திரேசா பாடசாலையின் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் சிலர் சிவசேனை அமைப்பின் போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. அருகில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தினர். (அ-05)

# ஆன்மீக உரை

யாழ்ப்பாணம், செப். 23

சிவகுரு ஆதீனத்தில் நவராத்திரியை முன்னிட்டு ஆன்மீக உரை நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி புதன்கிழமை வரை தினமும் மாலை 6.00 - 6.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை மனதில் உறுதி வேண்டும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தப்படும். (ஐ)

# திலீபனுக்கு சி.வி.கே. அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 23

தியாகி திலீபன் வரலாற்று அருங்காட்சியகம், நான் பார்த்து நெகிழ்ந்து வாழ்ந்த, தியாகி திலீபனின் தமிழின விடுதலையை நிலைநிறுத்தி நிற்கின்றது எனவும், எதிர்காலத்திலும் நிலைநிறுத்தி நிற்கும் எனவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூரில், மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ள தியாகி திலீபனின் அருங்காட்சியகத்துக்கு நேற்று சென்ற சி.வி.கே. சிவஞானம், திலீபனின் திருவுருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தி, அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்.

அதன் பின்பு, அங்கு காணப்பட்ட குறிப்பேட்டில் இந்த விடயத்தை பதிவிட்டுள்ளார்.

திலீபன் ஆவணக் காட்சியகம் கடந்த சனிக்கிழமை நல்லூரில் திறந்து வைக்கப்பட்டமை தெரிந்ததே. (அ)

# நாகர்கோவில் படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு

## ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

வடமராட்சி, செப். 23

நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில விமானப் படை மேற்கொண்ட விமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 21 மாணவச் செல்வங்களின் 30ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று காலை நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள நினைவாலயத்தில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்த குழந்தைகளுக்கு உணர்வுரீதியாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவுகள், பொது மக்கள், அரசியல் பிரமுகர்கள், மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

எனினும் ஊடகவியலாளர்கள் குறித்த நிகழ்வில் செய்தி சேகரிக்க சென்றபோது, வலயக் கல்விப் பணிப்பாளர் அனுமதி அளிக்கவில்லை என அதிபர் காரணம் காட்டி ஊடகவியலாளர்களை வெளியேற்றினார்.

இது தொடர்பாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஊடகவியலாளர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது தன்னால் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படவில்லை என்றும் பாடசாலை அதிபரிடம் தான் அனுமதிக்குமாறு தொலைபேசியில் தெரிவிப்பதாகவும் கூறிய நிலையிலும் நாகர்கோவில் மகா வித்தியாலய அதிபரால் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

எனினும், அதிபரின் உறவினரான வல்வெட்டித்துறையை சேர்ந்த யூரியூப்பர் ஒருவர் நினைவேந்தல் நிகழ்வுகளை காணொலி பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார். (அ-05)



# தியாக தீபம் திலீபனின் நினைவு நேற்று வவுனியாவில் அனுஷ்டிப்பு


வவுனியா, செப். 23

தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் உள்ள வாடி வீட்டில் இடம்பெற்றது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர் சார்பாக ஈகச்சுடரை ஏற்றியிருந்ததுடன் ஏனையவர்களினால் மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன் மாணவர்களுக்கான வினா விடை மற்றும் நடன போட்டிகளும் இடம்பெற்றிருந்ததுடன் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவ் அஞ்சலி நிகழ்வில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன், யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன், யாழ். மாவட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவர் ஈஸ்வரன் மற்றும் போராளிகள் நலன்புரிச் சங்க முக்கியஸ்தர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், முன்னாள் போராளிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# மண்டைதீவு கிரிக்கெட் மைதானப் பணிகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், செப். 23

மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதான ஆரம்பகட்ட பணியின்பணியின்போது கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் நேற்று மீட்கப்பட்டன.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு பகுதியில் சர்வதேச கிரிக்கெட் மைதான ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வரும்நிலையில் கடந்த 20 ஆம் திகதி ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன

இது தொடர்பான தகவல்கள் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு வழங்கப்பட்டது.

இவ் விடயம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதற்கிணங்க விடயம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் ரவைகளை மீட்டெடுப்பதற்கான. அனுமதியை கோரியதற்கிணங்க ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவிற்கமைய நேற்று காலை ரவைகள் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.09.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஒற்றுமை - அது எப்போது நிகழும்? நிகழுமா?

தமிழ் கட்சிகளின் ஒற்றுமை தொடர்பில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி தொடர்பில், இந்தியத் தூதுவர் பத்திரிகை ஆசிரியர்களிடம் தெரிவித்திருகிறார். தான் பொறுப்பேற்று இரண்டு வருடங்களாகின்றன. உங்களுடைய நிலைப்பாடுகளை உள்ளடக்கி கருத்தொருமித்து, அனைத்துக் கட்சிகளுமாக ஒன்றுபட்டு உங்கள் நிலைப்பாட்டை எழுத்து மூலம் தாருங்கள் என்னும் கோரிக்கையை முன்வைத்தேன். ஆனால், இன்றுவரையில் அது நடக்கவில்லை என்று தனது ஆதங்கத்தை ஒரு தூதுவர் குறிப்பிடுமளவுக்கு தமிழ் கட்சிகளின் நிலைமை இருக்கிறது. இதுதான் நிலைமை என்றால் மற்றவர்கள்மீது குற்றம் சுமத்துவதில் ஏதாவது பொருள் இருக்கிறதா?

யுத்தம் முடிந்து பதினாறு வருடங்களாக இடம்பெற்ற விடயங்களை உற்றுநோக்கினால், தமிழ் கட்சிகள் தங்களுக்குள் சண்டையிட்டதைத் தவிர வேறு எதனையும் செய்ததில்லை. இந்தப் பின்னணியில்தான் இந்தியாவை நோக்கிச் செல்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக வரவேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்துகின்றனர். அவர்கள் அவ்வாறு கூறுவதற்கு வலுவான காரணம் உண்டு. ஏனெனில், தமிழ் கட்சிகள் விடயங்களில் கருத்தொருமித்து, அதேவேளை இந்தியாவிடம் எதனைக் கேட்கவேண்டுமோ, அதனை ஒன்றுபட்டுக் கோரினால்தான், இந்தியாவினால், அரசாங்கத்துடன் சில விடயங்கள் தொடர்பில் உறுதியாகப் பேசமுடியும்.

கடந்த பதினாறு வருடங்களாகத் தமிழ்க் கட்சிகள் சின்னச் சின்ன விசயங்களை அடிப்படையாகக் கொண்டு, தங்களுக்குள் முட்டிக் கொண்டதைத் தவிர வேறுஎதனையும் செய்ததில்லை. அடிப்படையில் ஒரு குழுவாத மனோநிலையில்தான் தமிழக் கட்சிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நினைவேந்தல் நிகழ்வுகளை முன்வைத்து சண்டையிடுமளவுக்குத் தமிழர் அரசியல் தரம் தாழ்ந்து கிடக்கிறது. ஆனால், அரசாங்கங்களோ விடயங்களைக் கடந்த பதினாறு வருடங்களாக மிகவும் கச்சிதமாகக் கையாண்டிருக்கின்றன.

தமிழ் கட்சிகளை சின்னச்சின்ன விசயங்களில் ஈடுபடுவதற்கான சூழலை ஏற்படுத்திவிட்டு, பிரதான விடயங்களைக் கண்டுகொள்ளாத நிலையிலேயே அரசாங்கங்கள் செயல்பட்டிருக்கின்றன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அவ்வாறானதோர் அணுகுமுறையிலேயே தமிழ்க் கட்சிகளை நோக்கினால் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. அண்மையில், அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் திலீபனுக்கு அஞசலி செலுத்த முற்பட்டதும் அதனை அங்கிருந்தவர்கள் தடுத்தமையும் பேசுபொருளானது. தான் அந்த இடத்துக்கு சென்றால் இவ்வாறுதான் இவர்கள் நடந்துகொள்வார்கள் என்பதைத் தெரிந்துதான் குறித்த அமைச்சரும் அவ்விடததுக்கு வருகிறார். இறுதியில், அவர் எதை எதிர்பார்த்தோரோ அது சிறப்பாகவே நடந்துமுடிந்தது.

தமிழ்க் கட்சிகள் பேசும் விடயங்களை நோக்கினால் அனைத்துமே பருவகால விடயங்கள். பருவகாலம் முடிந்ததும் அடுத்த விடயத்துக்குக் கட்சிகள் தாவிவிடும். இவ்வாறான தமிழ் கட்சிகளை நம்பி இந்தியா எவ்வாறு ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளமுடியும். எந்த அடிப்படையில் அரசாங்கத்துடன் பேசமுடியும்? இந்த அடிப்படையில் நோக்கினால் இப்போது தவறு யார பக்கத்தில் இருக்கிறது என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ளமுடியுமல்லவா?

## சம்பத் மனம்பேரிக்கு சொந்தமான காணியில் ஆயுதங்கள், வெடிபொருட்கள் கண்டுபிடிப்பு!

கொழும்பு, செப். 23

மித்தெனியவில் சம்பத் மனம்பேரிக்குச் சொந்தமான காணியில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பத் மனம்பேரிக்கு சொந்தமானது என சந்தேகிக்கப்படும் 9மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி, இரண்டு ரி-56 மகசின்கள், 115 சுற்றுகள் ரி-56 வெடிமருந்துகள் மற்றும் ஒரு கைக்குண்டு ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.

மித்தெனியவில் உள்ள ஒரு காணியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இவை கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஐஸ் போதைப்பொருள் தயாரிக்க பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அடங்கிய கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்ட வழக்கில் சம்பத் மனம்பேரி கைதுசெய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பத் மனம்பேரியை ஏழு நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்துக்கு செப்ரெம்பர் 17ஆம் திகதியன்று வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

பாதாள உலகக் குழுத் தலைவர் கெஹல்பத்தர பத்மேவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் ஐஸ் போதைப்பொருள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் இரசாயனங்களை இரண்டு கொள்கலன்களில் மறைத்து வைத்ததாக சம்பத் மனம்பேரி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, மித்தெனியவில் அண்மையில் இரண்டு கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் சம்பத் மனம்பேரியிடம் விசாரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## புதிய மின்சார நிறுவனங்களுக்கு பணியாளர் ஆட்சேர்ப்புச் செய்யும் பணி நேற்று ஆரம்பம்!

கொழும்பு, செப். 23

இலங்கை மின்சார திருத்தச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நான்கு முழு அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை மின்சார சபையின் சில ஊழியர்கள் மேற்கூறியவாறு நிறுவப்படவுள்ள நிறுவனங்களில் சேர விருப்பம் தெரிவித்து கடிதங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தனர்.

இந்த விருப்பக் கடிதங்கள் நேற்று காலை இலங்கை மின்சார சபை தலைமையகத்தில் இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் உதயங்க ஹேமபாலவிடம் கையளிக்கப்பட்டன.

மேற்படி ஊழியர்கள், 2025 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்த) சட்டத்தின்படி நிறுவப்பட்ட முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களான தேசிய அமைப்பு கட்டுப்பாட்டு (தனியார்) நிறுவனம், தேசிய பரிமாற்ற வலையமைப்பு சேவைகள் வழங்கல் (தனியார்) நிறுவனம், இலங்கை மின்சார விநியோக நிறுவனம் (தனியார்) நிறுவனம் மற்றும் இலங்கை மின்சார உற்பத்தி நிறுவனம் (தனியார்) நிறுவனம் ஆகிய 04 நிறுவனங்களுக்கு நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்ப மின்சாரத் துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மாற்றங்களைச் செய்து செயல்படுத்தப்பட்ட மறுசீரமைப்புத் திட்டம் இலங்கை மின்சார சபை ஊழியர்களால் பாராட்டப்படுவதாகத் தெரிகிறது என்று எரிசக்தி அமைச்சு மேலும் கூறுகிறது. (அ)

## யோஷித மீதான விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, செப். 23

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுமார் 73 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோதமாக ஈட்டியதாக யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷ மற்றும் டெய்சி பாட்டி ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

குறித்த வழக்கை ஒக்ரோபர் 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 23 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 07
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திரையோதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
விஜபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**இடபம்**
நட்பு வட்டம் விரியும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். பழைய இனிய சம்பவங்கள் அனைத்தும் நினைவுக்கு வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.

**கடகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**சிம்மம்**
பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**துலாம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வாகனத்தை இயக்கும் போது அலைப் பேசியில் பேச வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டும்.

**விருச்சிகம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புதியகோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சிறப்பான நாள்.

**தனுசு**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.


# "மன்னன் சொத்து மக்கள் சொத்து" மந்திரிமனை முன்பு போராட்டம்

*யாழ்ப்பாணம், செப். 23*

தமிழர்களின் தொன்மையை எடுத்தியம்பும் நல்லூர் இராசதானியின் மந்திரிமனையைப் பாதுகாத்து மீளுருவாக்கம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கோரி நேற்றுக்காலை மந்திரிமனைக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மந்திரிமனையின் ஒரு பகுதி கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெய்த மழை காரணமாக உடைந்து விழுந்தது. இந்த நிலையில், அதனைப் பாதுகாக்குமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "இலங்கை அரசே தமிழர்களின் மரபுரிமை சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை எடு, இந்த இடத்தை உரிமை கோருபவரே மந்திரிமனையை இடித்துவிட்டு உல்லாச விடுதியா கட்டப்போகின்றீர்கள்?, தொல்லியல் திணைக்களமே பௌத்த சின்னங்களை பாதுகாப்பதுபோல் தமிழரின் மரபுரிமை சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை எடு, மன்னன் சொத்து மக்கள் சொத்து தனிநபரே உரிமை கொண்டாடாதீர்கள்" போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ-05)



## கடைகள் மூடப்பட வேண்டும்: கிளிநொச்சியில் கவனவீர்ப்பு

*கிளிநொச்சி, செப். 23*

கிளிநொச்சி வர்த்தக சமூக அபிவிருத்திச் சங்கத்தினர், கிளிநொச்சி பகுதியில் உள்ள வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் இணைந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வர்த்தக சங்கத்தின் தீர்மானத்தை மீறி ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கப்படும் ஒருசில வர்த்தக ஸ்தாபனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இந்த கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இது குறித்து வர்த்தக சங்கத்தின் உப தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

வாகனத் திருத்தகம், மருந்தகம் மற்றும் உணவகம் உள்ளிட்ட முக்கிய சேவைகளை செய்யும் வர்த்தக ஸ்தாபனங்கள் தவிர்ந்த ஏனை வர்த்தக ஸ்தாபனங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுமாறு வர்த்தக சங்கத்தால் யாப்பின் பிரகாரம் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எமது சங்கத்தின் பகுதிக்குள் 636 கடைகள் உள்ளன. அதில் நான்கு கடைகள் மாத்திரம் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. அத்துடன் அதிகூடிய இலாபம் ஈட்டும் நோக்குடன் பொருட்களை விற்பனை செய்து மக்களுக்கு இடையூறு விளைவிக்கின்றனர்.

எனவே, இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ஏனைய கடைகளின் உரிமையாளர்கள் அனைவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டோம். அனைவரும் இணைந்து கடைகளை பூட்டுமாறு அவர்களுக்கு கூறியும் அவர்கள் அதனை செவிமடுக்காமல் செயல்படுகின்றனர்.

சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்னைகளுக்கு பதில் கூற வேண்டிய ஒரு தரப்பினராக நாங்கள் உள்ளோம். எனவே, ஞாயிற்றுக்கிழமைகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் கடைகள் மூடப்பட வேண்டும்- என்றார். (எ-05)

## அருணோதயக் கல்லூரியில் மனைப்பொருளியல் கண்காட்சி

*யாழ்ப்பாணம், செப். 23*

அளவெட்டி அருணோதயக் கல் லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை மனைப் பொருளி யல் கண்காட்சி சிறப்பாக நடை பெற்றது. கல்லூரி முதல்வர் எஸ். ஜெயானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாண வர்களின் ஆக்கங்கள் பலவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மாணவர்களின் பாரம்பரிய உணவுத் தயாரிப்புகள் பலரையும் கவர்ந்தன. இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். (எ-05)



## உடலில் மறைத்து தங்கம் கடத்திய பெண் யாழ்ப்பாணத்தில் கைது

*யாழ்ப்பாணம், செப். 23*

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவர் உடலில் மறைத்து தங்கத்தை கொண்டு வந்தமை பலாலி விமான நிலைய அதிகாரிகளின் சோதனையின் போது தெரியவந்தது.

இதனையடுத்து கடத்தலில் ஈடுபட்ட பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு, சிகிச்சையின் பின் தங்கம் மீட்டு எடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது. (எ-03)

## ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டு கழகம் சம்பியன்

*யாழ்ப்பாணம், செப். 23*

கரப்பந்தாட்ட போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

யாழ்ப்பாணம் - மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 2025ஆம் ஆண்டுக்கான மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சென்ற வாரம் ஆரம்பமான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஏ பிரிவில் 7 கழகங்கள் பங்குபற்றி போட்டியிட்டிருந்தன.

இதில், இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கெரடாவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் பலப்பரீட்சை நடத்தியிருந்தது.

நான்கு சுற்றுக்களும் விறுவிறுப்பாக நடைபெற்ற நிலையில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மூன்று சுற்றுக்களில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

அத்துடன் பி பிரிவில் 20இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றிய நிலையில் இறுதிப்போட்டியில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி பலப்பரீட்சை நடத்தியது.

மூன்று சுற்றுக்களிலும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழகம் மூன்று சுற்றுக்களில் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

இதில், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் மா. இளம்பிறை வெற்றிக்கிண்ணத்தை வழங்கியிருந்தார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானுக்கு செல்கிறார் ஜனாதிபதி அநுரகுமார!

## பேரரசரை சந்தித்து பேசுவார்

கொழும்பு, செப். 23

**ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இவ்விஜயத்தின்போது, ஜனாதிபதி, ஜப்பான் பேரரசரை சந்தித்துப் பேசவுள்ளதுடன், பரஸ்பர ஆர்வம்கொண்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து ஜப்பானிய பிரதமருடன் உச்சி மாநாட்டு சந்திப்பொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

இலங்கையில் அதிகரித்து வரும் பொருளாதார வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்தும் வகையில், முக்கிய ஜப்பானிய வணிகங்கள் மற்றும் ரோக்கியோவில் உள்ள முதலீட்டாளர்களின் உயர் மட்டப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வணிக மன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

"எக்ஸ்போ 2025" இல், இலங்கைத் தினத்தின் வைபவத்திற்கான ஜப்பான் அரசாங்கத்தின் விருந்தினராக, "எக்ஸ்போ 2025 ஒசாகா" நிகழ்விலும் ஜனாதிபதி திஸாநாயக்க கலந்து கொள்வார். இந்நிகழ்வு சர்வதேச பார்வையாளர்களுக்கு இலங்கையின் கலாசாரப் பாரம்பரியம் மற்றும் பொருளாதார இயலுமையை முன்னிலைப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஜப்பானில் வசிக்கும் இலங்கைச் சமூகத்தினரிடமும் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.



ஜனாதிபதி திஸாநாயக்கவின் இவ்விஜயத்தில், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகளும் இணைந்துகொள்ளவுள்ளனர்.

ஜப்பான் விஜயமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்புப் பிணைப்புகளை மேலும் பலப்படுத்துவதுடன், மென்மேலும் விரிவுபடுத்தும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. (அ)

# 50, 000 மெற்றிக் தொன் நெல் விவசாயிகளிடம் கொள்வனவு

கொழும்பு, செப். 23

விவசாயிகளிடமிருந்து இதுவரை சுமார் 50 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளுக்காக, 6 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், அவசியம் ஏற்படும் நிலையில், மேலும் நெல்லை கொள்வனவு செய்வதற்குத் தயாரென அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், விவசாயிகளிடமிருந்து நாடு நெல் கிலோ ஒன்று 120 ரூபாவுக்கும், சம்பா நெல் கிலோ ஒன்று 125 ரூபாயிற்கும், கீரிச் சம்பா நெல் கிலோ ஒன்று 132 ரூபாவுக்கும் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# எல்ல பஸ் விபத்தின் விசாரணை நிறைவு

கொல்ழும்பு, செப். 23

பதுளை, எல்ல பகுதியில் 16 பேரின் உயிரைக் காவுகொண்ட பஸ் விபத்து தொடர்பான விசாரணையை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் நிறைவு செய்துள்ளது.

விசாரணை அறிக்கையை எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரிடம் கையளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தங்காலை நகரசபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் சுற்றுலா சென்ற பஸ், கடந்த 4 ஆம் திகதி இரவு எல்ல - வெள்ளவாய வீதியில் 24ஆவது மைல்கல் பகுதியில் பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர். இதுதவிர, 16 பேர் காயமடைந்தனர்.

விபத்து குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் தலைமையில் 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான பஸ் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என குறித்த குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அத்துடன் பஸ்ஸின் தடையாளி அமைப்பில் குறைபாடுகள் இருந்தமையும் தெரியவந்துள்ளது.

அத்துடன், வீதி குறித்து உரிய புரிதல் இன்றியே பஸ் சாரதி செயல்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# கடந்த வாரத்தில் மாத்திரம் அரிசி குறித்து 70 சோதனை

கொழும்பு, செப். 23

கடந்த வாரத்தில் மாத்திரம் அரிசி தொடர்பான 70 சோதனைகளை முன்னெடுத்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

விலையைக் காட்சிப்படுத்தாமல் அரிசியை விற்பனை செய்தமை, அரிசியைப் பதுக்கி வைத்தல் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்து சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, அரிசி தட்டுப்பாடு நாட்டில் இல்லையென அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட பெண் கைது!

கொழும்பு, செப். 23

சட்டவிரோதமாக தொல்பொருட்களைத் தோண்டிக் கொண்டிருந்த 29 வயதுடைய பெண் ஒருவர் அத்திமலை பொலிஸ் உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்திமலை பொலிஸ் பிரிவின் கெமுனுபுர பகுதியில் கிடைத்த தகவலின் அடிப்படையில் இச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அத்திமலை பொலிஸ் குழு ஒன்று சம்பந்தப்பட்ட இடத்தை சோதனை செய்தபோது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இருப்பினும், அந்த இடத்தில் இருந்த மற்ற சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

மேலும் அவருக்குச் சொந்தமானது என்று சந்தேகிக்கப்படும் ஒரு மோட்டார் சைக்கிளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அத்திமலை, கெமுனுபுர பகுதியைச் சேர்ந்தவர். (அ)

# சஷீந்திர ராஜபக்ஷவின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, செப். 23

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் ஊழல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரிக்கும் கொழும்பு தலைமை நீதிவான் அசங்க எஸ். போதரகம நேற்று அவரது பிணை மனுவை நிராகரித்து இந்த உத்தரவை பிறப்பித்தார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் 09ஆம் திகதி நடந்த போராட்டத்தின்போது, சஷீந்திர ராஜபக்ஷவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் செவனகலவில் உள்ள நிலத்தில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடம் உள்ளிட்ட சொத்துக்கள் சேதமடைந்தன.

இதற்கான நட்டஈட்டை பெறுவதற்கு அவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்வாக்கு செலுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹோட்டல் நீச்சல் தடாகத்தில் மூழ்கிய இளைஞர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 23

கட்டான -கண்டவல பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் உள்ள நீச்சல் தடாகத்தில் நேற்று முன் தினம் மதியம் நீந்திக் கொண்டிருந்த 23 வயது இளைஞர் ஒருவர் திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மஸ்கெலியா, மவுஸ்ஸாகலை பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் சில நண்பர்களுடன் நேரம் கழிக்க ஹோட்டலுக்கு வந்திருந்ததாகவும், நீச்சல் குளத்தில் நீந்தும்போது திடீரென மூழ்கியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், உடனடியாக அவரது உயிரைக் காப்பாற்ற முயற்சிக்கப்பட்டது என்றாலும், அந்த இளைஞர் உயிரிழந்தநிலையில் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கட்டான பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 658 பேர் கைது!

கொழும்பு, செப். 23

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் பொலிஸாரால் நடத்தப்பட்ட விஷேட சுற்றிவளைப்பின்போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 658 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் 27,631 பேர் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 23 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 305 சந்தேகநபர்கள் இந்த சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபானம் அருந்திய நிலையில் வாகனம் செலுத்திய 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்திய 19 பேர் உட்பட போக்குவரத்து விதிகளை மீறிய 4,451 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# மின் விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைக்குள்!

கொழும்பு, செப். 23

மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதியின் கட்டளைக்கு அமைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதில் கையெழுத்திட்டுள்ளார்.

சாதாரண பொது வாழ்க்கையைப் பராமரிப்பது அவசியம் என்பதையும், அந்த சேவைகளுக்கு இடையூறு அல்லது தடை ஏற்படக்கூடும் என்பதையும் கருத்தில் கொண்டு இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நிலையில், இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் கொள்முதல் மற்றும் கேள்விகோரல் செயல்முறைகளில் விலகித் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தங்காலை வீடொன்றில் இரண்டு சடலங்கள் மீட்பு!

கொழும்பு, செப். 23

தங்காலை, சீனிமோதர பகுதியில் புதுப்பிக்கப்பட்டு வந்த ஒரு பழைய வீட்டில் இரண்டு உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விசாரணையின்போது, வீட்டின் அருகே அமைந்துள்ள ஒரு லொறியில் இருந்து ஐஸ் போதைப்பொருள் அடங்கிய 10 பக்கெற்றுக்களையும் கண்டுபிடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், வீட்டில் இருந்த மற்றொரு நபர் திடீர் சுகவீனம் காரணமாக தங்காலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரும் இதன்போது உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து பொலிஸார் தற்போது விசாரணைகளை தொடங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக் குழுக்களுடன் பல அரசியல்வாதிகள் கலப்படம்

## சிறீநேசன் எம். பி. கடும் சாடல்

மட்டக்களப்பு, செப். 23

கடந்த கால இலங்கை அரசியலில் சட்டவிரோத, சமூக விரோத செயல்பாட்டாளர்களுடன் சட்டரீதியான அரசியவாதிகள் பலரும் கலப்படமாகிச் செயல்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

அந்த வகையில் முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 60 பேர் வரை பாதாள உலகத் தலைவர்களிடமிருந்து பணம் பெற்று செயல்பட்டு வந்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சட்டவிரோத பாதாளக் குழுவினருடன் நாட்டின் சட்டரீதியான அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள் கொண்டிருந்த உறவுகள் வேதாளங்கள் செய்வதாகக் கூறப்படும் பயங்கரவாத அரசியலாகவே கொள்ள வேண்டியுள்ளது.

பாதாள உலகக்குழுக்கள், வேதாள அரசியல் நாயகர்களும் இணைந்து செயல்படுவது என்பது மிகவும் ஆபத்தானதாகும். கறுப்புப்பணம் வழங்குநர்களாகவும் கூலிக்கொலையாளர்களாகவும் பாதாளலோகர்களை அரசியல் புள்ளிகள் பயன்படுத்தியுள்ளனர் என்ற தகவல் உலாவுகின்றது.

பாதாள குழுக்களை தமது சட்டவிரோத குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் அவர்கள் மாட்டிக் கொள்ளும் போது அழித்தும் விடுகின்றனர்.

இந்தோனேஷியாவில் இருந்து கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கெகல்பத்ரண பத்மே, கொமாண்டோ சலிந்து, பெக்கோசமன் போன்றவர்களை விசாரணை செய்யும் போது பாதாள குழுக்களுக்கும் வேதாள அரசியல் தலைகளுக்கும் இடையிலான சகவாசம் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதாக அறிகின்றோம்.

தேச பக்தர்களாக தம்மை விலாசப்படுத்தும் அரசியல் புள்ளிகள் தமது அந்தரங்க அரசியலில் இருக்கும் சுயநலத்தால், நாட்டையும் மக்களையும் அழிக்கும் படு பயங்கரமான பாதையில் பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது.

மக்கள் பார்வையில் வெள்ளைச் சட்டையர்கள், மறுபக்கப் பார்வையில் கொள்ளைக் கோஷ்டியினர். இவர்கள்தான் நாட்டை அழித்த நாசதாரிகள் என்பதை அறிய முடிகின்றது. இதுதான் நாட்டின் சாபக்கேடாக உள்ளது. இப்படியானவர்களை தோலுரித்துக் காட்டும் அரசாங்கத்தின் செயல்பாடுகளை மக்கள் வரவேற்கின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஐஸ்லாந்து ஜனாதிபதியாக நாமல்

## அமைச்சர் பிமல் விமர்சனம்

கல்முனை, செப். 23

நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி ஆவதற்கான பேச்சுவார்த்தை இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதை நான் பார்த்தேன். அவர் எங்கே போய் ஜனாதிபதியாக போகிறார் என்பதை நான் தேடிப் பார்த்தேன். ஐஸ்லாந்து நாட்டில் தான் அவர் ஜனாதிபதியாக போகிறார் என்பதை அறிந்தேன் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்காக நீங்கள் எவராவது மொட்டுக் கட்சிக்கோ அல்லது மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிகாரத்தை கொடுப்பீர்களா?. அவர்களிடம் மீண்டும் அதிகாரத்தை கொடுப்பதற்கு எங்களில் யாருக்காவது பைத்தியமா? ஆகையால் மக்கள் முன் வைத்த அடியை பின் வைக்க மாட்டார்கள்.

இந்த அரசாங்கம் தான் முன்னேறிச் செல்லப் போகின்றது. இந்து அரசாங்கத்தை தோற்கடிப்பதாயின் என்ன செய்ய வேண்டும்.

இதைவிட ஒரு நல்ல கட்சி வரவேண்டும். மக்களே நீங்கள் எந்தவொரு விடயத்திலும் பின் வாங்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

அம்பாறை, மாவடிப்பள்ளி பெரிய பால புனர்நிர்மாணப் பணி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-01)

# மாவடிப்பள்ளி பெரிய பாலம் புனர்நிர்மாண பணி ஆரம்பம்

காரைதீவு, செப். 23

அம்பாறை - கல்முனை, காரைதீவை இணைக்கும் மாவடிப்பள்ளி பெரிய பாலம் புனர்நிர்மாணப் பணி சனிக்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இப்பாலமானது சுமார் 90 வருடங்கள் பழமை வாய்ந்தது. மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைய சுமார் 247 மில்லியன் ரூபாய் நிதி உதவி ஊடாக புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. (எ)



# 5 வீதிகளுக்கு ஒரே நாளில் அபிவிருத்தி பணி ஆரம்பம்

கல்முனை, செப். 23

அம்பாறை மாவட்டத்தின் தீகவாபி - அஷ்ரப் நகர் வீதியை 16. 9 மில்லியன் ரூபாய் நிதியில் அபிவிருத்தி செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இதே வேளை கல்முனை, மருதமுனை பிரதேசங்களில் இரு வீதிகளும் நற்பிட்டிமுனையில் ஒரு வீதியுமாக மொத்தம் 5 வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கடந்த இரண்டு வருடங்களில் இரண்டு வெள்ளப் பெருக்கினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தீகவாபி - அஷ்ரப் நகர் பிரதான வீதி அரசாங்கத்தால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த வீதி அபிவிருத்திக்கான ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா கலந்து கொண்டதுடன் வீதிப் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார். (எ-01)

# வாழைச்சேனை கிண்ணியடி வாவியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## குற்றத் தடுப்பு பிரிவினரால் இருவர் கைது

மட்டக்களப்பு, செப். 23

மட்டக்களப்பு, வாழைச்சேனை கிண்ணியடி வாவியின் நடுவில் உள்ள மேட்டுநில காட்டுப் பகுதியில் இயங்கி வந்த பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது.

கிழக்கு மாகாண குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகல் குறித்த நிலையத்தை முற்றுகையிட்டு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கைது செய்ததுடன் 6 பரல் கொண்ட 1080 லீற்றர் கோடா, 30 லீற்றர் கசிப்பு என்பனவற்றை மீட்டு ஒப்படைத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து பொலிஸ் பரிசோதகர் ரி. மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் தோணி மூலம் வாவியில் பிரயாணித்து குறித்த பகுதியை சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு கசிப்பு உற்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவரை கைது செய்ததுடன் 6 பரல் கொண்ட 1080 லீற்றர் கோடா, 30 லீற்றர் கசிப்பும் மற்றும் உற்பத்தி உபகரணங்களை மீட்டு வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கசிப்பு உற்பத்தி குழுவைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் கசிப்பு உற்பத்தி செய்வதற்கு வாவியில் பிரயாணித்த போது முதலை தாக்குதலுக்கு உள்ளாகி சடலமாக மீட்கப்பட்டார் என பொலிஸார் கூறினர். (எ)

# பிறந்த நாளன்று விபத்தில் உயிரிழந்த இளைஞன்!

நுவரெலியா, செப். 23

வேகமாக சென்ற லொறி ஒன்றில் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் அதனைச் செலுத்திச் சென்ற இளைஞன் படுகாயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

நுவரெலியாவின் ஹாவா எலியா பகுதியைச் சேர்ந்த மனித் அபுர்வ (வயது- 21) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

இராகலை - நுவரெலியா பிரதான வீதியில் ஹாவா எலியா சந்தியில் நேற்று முன்தினம் இரவு 09: 30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் நுவரெலியா பொலிஸ் போக்குவரத்து அதிகாரிகள், தனது வீட்டிலிருந்து நுவரெலியா நகருக்குள் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன், குறித்த சந்தியிலிருந்து நுவரெலியா நகருக்குள் செல்ல முற்பட்டபோது, இராகலையிலிருந்து நுவரெலியா நோக்கி அதிவேகமாகச் சென்ற லொறியில் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தனர்.

லொறியின் சாரதியை நுவரெலியா பொலிஸார் கைது செய்தனர்.

விபத்தில் உயிரிழந்த இளைஞனின் 21ஆவது பிறந்தநாள் நேற்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீதியின் மத்தியில் ஓட்டை வடிகான்: ஆபத்தான நிலையில் வடிவேல் வீதி

## கவனிப்பார் இல்லை; மக்கள் விசனம்

காரைதீவு, செப். 23

அம்பாறை மாவட்டம், காரைதீவு 12ஆம் பிரிவில் உள்ள வடிவேல் வீதி மத்தியில் பாரிய ஓட்டையுடன் கூடிய வழிகான்களுடன் அபாய நிலையில் உள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் நிருவாகத்தின் கீழ் உள்ள இவ்வீதி பலகாலமாக கவனிப்பாரற்று காணப்படுகிறது.

இந்த வீதியால் பயணிக்கும் வாகனங்கள், பயணிகள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டியுள்ளது.

சில இடங்களில் வீதி தாழிறங்கியுள்ளது.

இவ்விதம் சுமார் 100 மீற்றர் தூரம் பாரிய ஆபத்தோடு காணப்படுகின்ற இந்த வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவந்த போதும் யாருமே அதனை கவனிக்கவில்லை.

இந்த அரசாங்க காலத்திலாவது வீதியைச் சீர் செய்து தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, வடிவேல் வீதியின் மத்திய பகுதியில் ஒழுங்கான வடிகால் இன்மையால் மழை காலங்களில் அருகில் உள்ள குடிமனைகள் வெள்ளத்தில் மூழ்கின்றன. (எ-01)

# உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு

சம்மாந்துறை, செப். 23

வளமான நாடும் - அழகான வாழ்க்கை யும் எனும் தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்படும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் சம்மாந் துறை பிரதேசசபையின் ஏற்பாட்டில் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் தவிசாளர் எம். மாஹிர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா கலந்து சிறப்பித்தார்.

கடந்த ஒரு வார காலமாக நடைபெற்ற உள்ளூராட்சி வார நிகழ் வுகளின் போது பங்குபற்றியவர்கள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

பரிசோதித்து அதில் உள்ள தங்கத்தின் அளவு மற்றும் எடை குறித்த விரிவான அறிக்கையை நீதிமன்றத்துக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நகல்களுடன் சமர்ப்பிக்குமாறு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது

இதன்படி, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையால் பரிசோதிக்கப்பட்ட 6 ஆயிரம் தங்கப் பொருட்கள் மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

தொடர்புடைய வழக்கு நீதிமன்றத்தில் நேற்றுஅழைக்கப்பட்டபோது சமர்ப்பணங்களை முன்வைத்து குறித்த அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

## வலுசக்தி...

தீர்த்து, முறையான நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதே அரசாங்கத்தின் தேவை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற மின்சாரத் துறையில் புதிய மறுசீரமைப்புகள் குறித்த முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மின்சாரத் துறையில் புதிய மறுசீரமைப்புகளுக்காக நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை மின் உற்பத்தி நிறுவனம், தேசிய பரிமாற்ற வலையமைப்பு விநியோக நிறுவனம், இலங்கை மின்சார விநியோக நிறுவனம் மற்றும் தேசிய கட்டமைப்பு இயக்க நிறுவனம் உட்பட புதிதாக நிறுவப்பட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

மின்சாரத் துறையின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலம் புதிய மாற்றத்திற்கு ஒரு புதிய நிறுவனக் கட்டமைப்பு அவசியம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக பழைய கட்டமைப்பு இனி மேலும் போதுமானதாக இல்லை என்றும், புதிய கட்டமைப்பின் அவசியத்தை யாரும் மறுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதன்போது, தற்போது வகிக்கும் பதவிகள் அல்லது சம்பள அளவுகள் எந்த வகையிலும் குறைக்கப்படாமலும், பதவி உயர்வுக்கு செல்வதற்கு நிலவிய தடைகளை நீக்கும் வகையில் செயற்படல், அனைத்து ஊழியர் உரிமைகளையும் பாதுகாத்தல், புதிய நிறுவன கட்டமைப்பில் இலங்கை மின்சார சபையாக இருந்த அனைத்து உரிமைகளையும் உறுதி செய்தல், புதிய நிறுவன கட்டமைப்பில் உள்வாங்கப்படும்போது இலங்கை மின்சார சபையாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகளைத் தீர்த்தல், வலுசக்தி இறையாண்மையைப் பாதுகாத்தல் மற்றும் அதை முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக மாற்றுவது ஆகிய கோட்பாடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிறுவனங்கள் அதன் ஊழியர்களுக்காக அன்றி, நாட்டிற்காகவும் பொதுமக்களுக்காகவும் உள்ளன என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி, மிகவும் செயற்திறனுடனும் தொடர்ச்சியாகவும நியாயமான விலை யிலும் நுகர்வோரின் மின்சாரத் தேவை களை பூர்த்தி செய்ய முடிந்தால், அது அரசாங்கத்திற்கும் ஊழியர்களுக்கும் கிடைத்த வெற்றியாகும் என்றும் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் எப்போதும்தயாராக இருப்பதாகவும் இலங்கை மின்சார சபையில் நடப்பது நீண்டகால நிறுவன கட்டமைப்பை புதிய நிறுவன கட்டமைப்பாக மாற்று வது மாத்திரமே என்றும், இது விற்ப னையோ, அரச உரிமையை கைவிடுவதோ அல்லது வலுசக்தி இறையாண் மையை கைவிடுவதோ அல்ல என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதுவே உலகின் அபிவிருத்திக்கான பாதை என்றும் தெரிவித்தார். (அ)

## மின்சார...

மின்சார சபையின் இலவச தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரபாத் பிரியந்த தெரிவித்தார்.

அதிகாரிகள் தங்கள் கோரிக்கைகளுக்கு தீர்வுகளை வழங்காவிட்டால், வரவிருக்கும் தொழிற்சங்க நடவடிக்கை குறித்து 24 ஆம் திகதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும், 25 தொழிற்சங்கங்களும் 24 ஆம் திகதி மதியம் மீண்டும் கூடி, இந்த இரண்டு நாட்களில் நல்ல விவாதம் நடைபெறவில்லை என்றால், புதன்கிழமை இறுதிக் கட்டமான வேலைநிறுத்த முடிவை எடுப்போம்-என்றார். (அ)

## மகிந்த...

திங்கட்கிழமை இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவில் முன்னிலையாகி முறைப்பாடளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல்வாதிகளின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களை இலஞ்சம, ஊழல் பற்றிய ஆணைக்குழு தற்போது வெளியிட்டுள்ளது. குறித்த வெளிப்படுத்தல்கள் தொடர்பின் உள்ளடங்கல் குறித்து அரசாங்கத்தின் அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்களுக்கு எதிராகவும், எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளோம்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சமர்ப்பித்துள்ள சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்கள் சந்தேகத்துக்குரியதாக காணப்படுகின்றன. தான் சட்டத்தரணியாக பணி புரிந்து சொத்துகளை சேகரித்துள்ளதாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களை காட்டிலும் அவரிடம் அதிகளவான சொத்துகள் இருக்கும் என்ற சந்தேகம் காணப்படுகிறது. அவரது உறவினர்கள் அல்லது நண்பர்களின் பெயர்களிலும் அவரது சொத்துகள் இருக்கலாம். ஆகவே இவ்விடயம் குறித்து ஆணைக்குழு முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முறைப்பாடளித்துள்ளோம்.

இரண்டாவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷக்கு எதிராக முறைப்பாடளித்துள்ளோம். இவர் வசித்த கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள அரச உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்பதற்கு 51 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.இந்த புனரமைப்புப் பணிகள் முறையான விலைமனு கோரலுடன் மேற்கொள்ளப்பட்டதா, அல்லது புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளாமல் 51 கோடி ரூபாய் பதுக்கப்பட்டதா என்பதில் சந்தேகம் காணப்படுகிறது. ஆகவே இந்த முறைப்பாடு குறித்தும் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷவின் மனைவியான ஷிரந்தி ராஜபக்ஷ 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் இல.260 டொரிங்டன் மாவத்தை கொழும்பு 07 இல் 360 இலட்சம் ரூபாவுக்கு வீடொன்றை கொள்வனவு செய்துள்ளார். இந்த வீட்டை கொள்வனவு செய்வதற்காக அவருக்கு 360 இலட்சம் ரூபாய் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதில் சந்தேகம் உள்ளது.

ராஜபக்ஷர்கள் அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தி தங்களை வளப்படுத்தி நாட்டு மக்களை வங்குரோத்து நிலைக்கு தள்ளியள்ளார்கள்.இவர்களின் சொத்து குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டு, உரிய சட்ட நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொள்ளவேண்டும்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் குடும்பம் முறையற்ற சொத்து சேகரித்த விவகாரத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதை போன்று ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# கிளிநொச்சி திரேசா மகளிர் கல்லூரி அதிபர் நியமனத்தில் முறைகேடு இல்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 23

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி அதிபர் நியமனத்தில், முறைகேடுகள் இடம்பெறவில்லை எனவும், சிலர் வேண்டுமென்றே, முறைகேடு இடம் பெற்றது என வேண்டுமென்றே விசமப் பிரசாரத்தை முன் னெடுக்கப்படுகிறது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் இ.சூரியசத்திய சீலன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் ஊடக சந்திப்பை நடத்தியவேளை, இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

## வட்டுவாகலில்...

உரிமையாளர் தீ பற்றியதை கண்டு வீட்டுக்கு வெளியே வந்து உறவினர்களின் உதவியுடன் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தார்.

இதனால் வீட்டின் முன்பகுதி எரிந்ததுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் தீக்கிரையாகியது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## கரைச்சி...

மக்களை ஆள நினைக்காதே, இது வரை காலமும் ஏமாற்றியது போதும், அப்பாவி மக்களுக்கு அநியாயம் செய்யாதே போன்ற சுலோகங்களையும் ஏந்தியவாறு சிலர் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி நகர சித்தி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து பேரணியாக பிரதேச சபை வரை சென்று பிரதேச சபைக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். சபைத் தவிசாளர் அலுவலகத்தில் இல்லாத நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் பிரதேச சபையின் செயலாளரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தனர்.

கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் தங்கபாண்டி ஞானராஜிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கையளித்தனர். (அ)

## மத்திய அரச...

பலரும் கலந்துகொண்ட னர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் நிலவும் ஒருங்கிணைப்புக் குறைபாடுகளால், வளங்கள் வீணடிக்கப்படுவதாகவும் திட்டங்களின் வினைத்திறன் குறைவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலின்போது, மத்திய அரசு மற்றும் மாகாண அதிகாரிகளுக்கு இடையிலான இடைவெளியை குறைத்து, வள விரயத்தைத் தடுத்து, வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. அதற்கமைய, தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண அமைச்சுக்களுடன் இணைந்து நீர்த்தேக்கங்களுக்கான ஒருங்கிணைந்த வர்த்தக திட்டங்களைத் தயாரிப்பதற்கும், தன்னிறைவு அடையும் வகையில் நன்னீர் மீன் குஞ்சுகளை இருப்புச் செய்வதற்கான ஒரு பேண்தகு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதி அமைச்சர் ரத்ன கமகே, "மாகாண சபை, மத்திய அரசு என்ற பேதமின்றி, நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். வளங்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்து, கடற்றொழில்துறையை, குறிப்பாக நன்னீர் மீன்பிடித்துறையை கட்டியெழுப்புவதற்கு இந்த ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் இன்றியமையாதது. ஒரு நாடாக எமது உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் கடற்றொழில்துறைக்கு ஒரு பெரும் பங்கு உள்ளது. இந்த ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம், மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளினால் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்த எமக்கு வாய்ப்புக் கிடைக்கும்," என்றார். (அ)

## மாகாண சபை...

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தொழில் திணைக்களத்தின் நடமாடும் சேவையில் கலந்துகொண்ட பின் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தொழில் அமைச்சின் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தில் நடைபெறும் நடமாடும் சேவையை நிகழ்வில் கலந்து கொண்டதோடு அலுவலகத்தையும் கண்காணித்தார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் எஸ்.சிவரஞ்சினி, வடக்கு மாகாண அலுவலக உதவி தொழில் ஆணையாளர் மு.நாகேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் யு. அன்ரன் தனேஸ் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். (அ)

## 321 போதைப்...

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் பல்வேறு பகுதிகளில் ஐஸ் போதைப்பொருள் உட்பட பல போதைப்பொருள்கள் கைப்பற்றப்படுகின்றன. 2 கொள்கலன்கள் மாத்திரமே கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. மிகுதி 321 கொள்கலன்கள் எங்கே? இந்த கொள்கலன்கள் விடுவிப்பில் அரசாங்கம் உண்மையை மறைக்கிறது - என்றார். (அ)

## தங்கள்...

ஏப்ரல் முதலாம் திகதி முதல் இந்த வருடம் மார்ச் 31 வரையான காலப் பகுதிக்கு உட்பட்டவையாகும். அதற்கு பின்னர். ஜனாதிபதி ஜூன் 13 முதல் 15 வரை இங்கிலாந்துக்குச் சென்றார்.

அந்த பயணத்திற்கான விமான பற்றுச்சீட்டு, விருந்தக செலவுகள் என்பவற்றை யார் வழங்கினார்கள் என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவேண்டும்ஆனால், இவை எதுவும் சொத்து தகவலில் குறிப்பிடப்படவில்லை.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க 2024இல் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் சென்றார். அவர் ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன்பே இந்த பயணங்களை மேற்கொண்டிருந்தாலும், அவற்றுக்கான செலவுகள், யார் வழங்கினார்கள் என்பது குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2025 மே மாதத்தில் தனிப்பட்ட விமானத்தில் வருகை தந்த முதல் ஜனாதிபதி என்ற வரலாறு எழுதப்பட்டது. அந்த விமானம் வியாட்நாம் அரசால், வழங்கப்பட்டதாகவும், அங்குள்ள தனியார் அமைப்பால் வழங்கப்பட்டதாகவும் வெவ்வேறு தகவல்கள் கூறப்பட்டன. இதன் உண்மை என்னவென்பது சொத்து தகவலில் தெரிய வரும். தவறான அல்லது மறைக்கப்பட்ட சொத்துத் தகவல் ஒரு கடுமையான குற்றமாகும். இதனால் சொத்துகளை அரசு கைப்பற்றலாம்.

அவ்வாறானவர்களுக்கு 200,000 ரூபாய் அபராதமும் ஒரு வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்படும். அமைச்சர் வசந்த சமரசிங்க ஒரு பாரம்பரிய வளமிக்க குடும்பத்தை சேர்ந்தவர். எனினும், அவர் வருமான வரி செலுத்தவில்லை-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கஞ்சா செய்கையில் ஈடுபட்ட இருவர் கைது!

கொழும்பு, செப். 23

இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள கஞ்சா செடிகளுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு அதிகாரிகள் வழங்கிய புலனாய்வு தகவலின்படி, ஹம்பேகமுவ பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் இராணுவ புலனாய்வு அதிகாரிகள் இணைந்து ஹம்பேகமுவ பகுதியில் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின்போது இரண்டு கஞ்சா தோட்டங்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த கஞ்சாத் தோட்டத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை கண்டுபிடிக்கப்பட்ட கஞ்சா செடிகள் 02 இலட்சம் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ளதாகவும், அனைத்து கஞ்சா மரங்களும் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வரி நிவாரணத்துக்காக இலங்கை அமெரிக்காவுடன் தொடர் பேச்சு!

கொழும்பு, செப். 23

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான வரிகள் குறித்து நிவாரணம் பெறும் நோக்கில் வர்த்தக அமைச்சு, அமெரிக்காவுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், முன்னைய அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்ட வர்த்தகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்து தற்போதைய அரசாங்கம் எவ்வித தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என வர்த்தக அமைச்சின் செயலாளர் கே.ஏ.விமலேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கான வரியை 20 வீதத்தால் குறைப்பதற்கு அமெரிக்கா கடந்த மாதம் தீர்மானித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, அரசாங்கம் எதிர்பார்க்கும் மேலதிக நிவாரணம் இதுவரை கிடைக்கவில்லை எனவும், இது தொடர்பாக மேலும் எதிர்பார்ப்புடன் உள்ளதாகவும் வர்த்தக அமைச்சின் செயலாளர் கே.ஏ.விமலேந்திரராஜா கூறினார். (அ)

# கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் வீதி விபத்துக்களில் 1,897 பேர் பலி!

## போக்குவரத்து பொலிஸ் பணிப்பாளர்

கொழும்பு, செப். 23

**கடந்த ஒன்பது மாதங்களில் மொத்தமாக ஆயிரத்து 897 பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளதாக போக்குவரத்து பொலிஸ் பணிப்பாளர் எஸ். எஸ். பி. மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார்.**

இது வீதி விபத்துக்கள் அதிகரித்து வரும் போக்கு என்பதை எடுத்துக் காட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

அதிகரித்து வரும் உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்த கடுமையான சட்ட அமுலாக்கம் மற்றும் பொறுப்பான வாகனம் ஓட்டுதலின் அவசர தேவையை அவர் வலியுறுத்தினார்.

பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டுவதைக் கண்காணிக்க நாடு முழுவதும் போக்குவரத்துப் பொலிஸ் 70 அதிவேக கண்டறிதல் இயந்திரங்களை நிறுவியுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

2025ஆம் ஆண்டில் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகரித்துள்ளதாகவும், மோட்டார் சைக்கிள் மூலம் 923 விபத்துகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# ஆடையற்ற நிலையில் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, செப். 23

மொறட்டுவ, ஈகொட உயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மோதரயிலுள்ள ஜெயசுத்புர கடற்கரையில் நேற்றுக் காலை ஆடைகள் எதுவும் இன்றி சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஈகொட உயன பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரின் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்தவர் யாரென்று இன்னும் அடையாளம் காணப்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில் 50-60 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (அ)

# அதிகரித்து வரும் சைபர் குற்றங்கள்

கொழும்பு, செப். 23

நடப்பாண்டின் முதல் 7 மாதங்களில் சமூக ஊடகங்கள் மூலம் செய்யப்பட்ட சைபர் குற்றங்கள் தொடர்பாக 6512 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 1198 நிதி மோசடி தொடர்பாக பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவின் பொறியியலாளர் சாருகா தமுனுபொல கூறியுள்ளார்.

இவற்றில் பெரும்பாலானவை போலியான பேஸ்புக் கணக்குகள், பாலியல் துன்புறுத்தல், அவமதிப்பு மற்றும் வட்ஸ்அப் கணக்குகளை ஹக் செய்தல் மூலம் செய்யப்பட்ட சம்பவங்கள் என்றும் கூறப்படுகிறது. (அ)

# புத்தகங்களுக்கு விதிக்கப்பட்ட 18 வீத வரியால் சிக்கல்

கொழும்பு, செப். 23

புத்தகங்களுக்கு விதிக்கப்பட்ட 18 வீத பெறுமதி சேர் வரி வாசகர்களுக்குத் தள்ளுபடி விலையை வழங்குவதற்கு பெரும் தடையாக மாறியுள்ளதாக இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே இலங்கை குறித்த சங்கத்தின் செயலாளர் லசித உமகிலிய இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் கண்காட்சிக்கு வருவோரிடம் நூல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி குறைக்கக் கோரும் பொது மனுவில் கையெழுத்திட அழைக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2025 கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி செப்ரெம்பர் 27 முதல் ஒக்ரோபர் 6 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

புத்தக உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலைகள் ஓரளவுக்குக் குறைந்திருந்தாலும், பெறுமதி சேர் வரி தொடர்ந்தும் வெளியீட்டாளர்கள் குறிப்பிடத்தக்கத் தள்ளுபடிகளை வழங்குவதைத் தடுக்கிறது என லசித உமகிலிய குறிப்பிட்டார். (அ)

புலிகளுக்கு நிதி திரட்டிய வழக்கில்

# சென்னை புழல் சிறையில் இருக்கும் இலங்கைப் பெண்ணிடம் விசாரணை

சென்னை, செப். 23

2022 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நிதி திரட்ட முயன்ற வழக்கில் கைது செய்யப்பட்ட இலங்கைப் பெண் மேரி பிரான்சிஸ்கா லட்சுமணனை விசாரிக்க அமுலாக்க பணியகத்துக்கு சென்னையில் உள்ள சிறப்பு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு முதல், மேரி பிரான்சிஸ்கா சென்னை புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சென்னை நீதிமன்றம் செப்ரெம்பர் 17 அன்று ஒரு உத்தரவைப் பிறப்பித்தது.

அதன்படி, அடுத்த ஏழு நாட்களில் இரண்டு நாட்கள் மேரி பிரான்சிஸ்காவை விசாரிக்க அமுலாக்கத் துறைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட புலிப் பயங்கரவாத நிதி வழக்கில் அமுலாக்கப் பணியகம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த லட்சுமணன் மேரி பிரான்சிஸ்கா 2019 டிசெம்பர் 16, அன்று சுற்றுலா விஸாவில் இந்தியாவுக்குள் நுழைந்தார்.

மத்திய புலனாய்வு நிறுவனங்களின்படி அவரது நோக்கம், போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இந்திய புகைப்பட அடையாள அட்டைகளைப் பெறுவதும், அவர் தங்கியிருப்பதை நீடிப்பதும் ஆகும்.

இந்த நிதி, இலங்கையிலும் பிற இடங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகள், மறுமலர்ச்சிக்கு பயன்படுத்தப்பட இருந்ததாக தேசிய புலனாய்வு நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால், 2021 ஒக்ரோபர் 2 அன்று சென்னை விமான நிலையத்தில் பிரான்சிஸ்கா தடுத்து நிறுத்தப்பட்ட பின்னர், அவரது முயற்சி தோல்வியடைந்தது.

அன்றிலிருந்து அவர் நீதிமன்றக் காவலில் உள்ளார்.

தற்போது, புலிகள் அமைப்பை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சித்ததாகக் கூறப்படும் பணமோசடி விசாரணையின் ஒரு பகுதியாக அமுலாக்கப் பணியகம் அவரிடம் விசாரிக்க உள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரான்சிஸ்கா அடைத்து வைக்கப்பட்டுள்ள சென்னை புழல் மத்திய சிறையில் அடுத்த வாரம் விசாரணை நடைபெறும். (அ)

# ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்தும் வளர்ச்சியணி எதுவும் நடக்கவில்லை

## அநுர அரசை சாடுகிறார் மகிந்த

கொழும்பு, செப். 23

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், மக்கள் கவனிக்கத்தக்க எந்த வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் பிறந்தநாளை முன்னிட்டு களுத்துறையில் நேற்று முன் தினம் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கூறினார்.

விஜேராம இல்லத்தில் இருந்து தங்காலைக்குச் சென்ற பின், மகிந்த ராஜபக்ஷ வெளியில் கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சி இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 20 வருடங்களாக மக்களை ஏமாற்றிய போலி மருத்துவர்

கொழும்பு, செப். 23

சுமார் 20 வருடங்களாக மருத்துவராக வேடமிட்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வந்த ஒருவர் ஈகொட உயன பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்துவ, வாதுவ பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய சந்தேகநபரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மருத்துவர் அல்லர் என்றும், இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட மற்றொரு மருத்துவரின் பதிவு எண்ணைப் பயன்படுத்தி வந்துள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org